பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 05 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் தடையற்ற எரிசக்தி விநியோகத்தை தொடர்ந்து உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. சுயசார்பு பஞ்சாயத்து குறித்த தேசிய அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கம் இன்று ஐதராபாத்தில் நடைபெறவுள்ளது.

3. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 5 மற்றும் 6-வது பிரிவுகளில் மின் உற்பத்திக்கான தளவாடங்களை நிறுவுவதற்கு அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

4. நீலகிரி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

5. 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்தியக் கிழக்கில் நிலவி வரும் அசாதாரண சூழலை எதிர்கொள்ளவும் நாட்டில் தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்யவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் முறைகேடுகளைத் தடுக்க நாடு முழுவதும் அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று ஒரே நாளில் மட்டும் 2 ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிலிண்டர் முன்பதிவுகள் 98 சதவீதம் ஆன்லைன் மயமாக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று சுமார் 49 புள்ளி 8 லட்சம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

முறைகேடுகளைத் தவிர்க்க OTP அடிப்படையிலான விநியோகம் 93 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தக ரீதியிலான எரிவாயு ஒதுக்கீடு 70 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்தாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

சுயசார்பு பஞ்சாயத்து குறித்த தேசிய அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கம் இன்று ஐதராபாத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பலப்படுத்தி, கிராமப் பொருளாதாரத்தைத் தற்சார்பு கொண்டதாக மாற்றுவதற்காக மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதில் நாடு முழுவதிலுமிருந்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

தேசிய கிராம சுயராஜ்யத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் 'சுயசார்பு பஞ்சாயத்து' திட்டத்தின் நோக்கம், செயல்பாட்டு வழிமுறைகள் மற்றும் அதன் இலக்குகள் இந்த பயிலரங்கில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

இந்தப் பயிலரங்கை மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் செயலாளர் திரு. விவேக் பரத்வாஜ் தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 5 மற்றும் 6-வது பிரிவுகளில் மின் உற்பத்திக்கான தளவாடங்களை

நிறுவுவதற்கு இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, அணு உலை அழுத்தக் கலன் நீராவி ஜெனரேட்டர்கள் மற்றும் குளிர்விக்கும் பம்புகள் உள்ளிட்ட மிக முக்கியமான இயந்திரங்களை நிறுவும் பணிகளை இந்திய அணுமின் கழகம் இனி மேற்கொள்ள முடியும்.

அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் தலைவர் திரு. ஏ. கே. பாலசுப்ரமணியன் தலைமையிலான குழுவினர், இந்த பிரிவுகளின் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் இதுவரை நடைபெற்றுள்ள கட்டுமானப் பணிகளைத் ஆய்வு செய்த பின்னர் இந்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவியுடன் தலா ஆயிரம் மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 6 அலகுகள் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

<<<<>>>>

சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக வெற்றிபெறும் என்று அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ கூறியுள்ளார்.

நேற்று காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுகவின் வாக்கு சதவீதத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறினார்.

இதனை தேர்தல் முடிவுகள் உணர்த்தும் என்றும் திரு. கடம்பூர் ராஜு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் களம் இந்த முறை வித்தியாசமாக உள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. கே. பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

விழுப்புரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் வந்துள்ளபோதிலும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அதேநேரத்தில் திமுக ஆட்சிக்கு வந்தாலும், அந்த அரசு கடைபிடிக்கும் செயல்பாடுகளைப் பொறுத்தே இடதுசாரி கட்சிகளின் நிலைப்பாடு இருக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

கோடைகால நெரிசலை கருத்தில் கொண்டு தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

திருச்சியில் இருந்து பெங்களூருவிற்கு இம்மாதம் 5, 12, 19, 26 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுமார்க்கத்தில் பெங்களூருவில் இருந்து இதே தேதியில் திருச்சிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் இருந்து காலை மணி 6.15க்கு புறப்படும் சிறப்பு ரயில், பிற்பகல் மணி 1.45க்கு பெங்களூரு சென்றடையும்.

மறுமார்க்கத்தில் பெங்களூருவில் இருந்து மாலை 3 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், அன்றிரவு மணி 10.30க்கு திருச்சி வந்தடையும் என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதேபோல் தூத்துக்குடி - தாம்பரம் இடையே இயக்கப்படும் சிறப்பு ரயில், வரும் திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தாம்பரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு மாலை மணி 3.30க்கு புறப்படும் சிறப்பு ரயில், நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் **10** நிமிடம் தாமதமாக மணி **3.40**க்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மின் விநியோக கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால் ரயில்களின் காலதாமதம் பெருமளவு குறைய வாய்ப்புள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

பராமரிப்பு பணிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப முறைகளை துல்லியமாக பின்பற்றியதன் காரணமாக இது சாத்தியமானதாக ரயில்வே கூறியுள்ளது.

இதனால் ரயில்கள் தடையின்றி இயங்குவதுடன், பயணிகளின் பயண நேரமும் குறைந்து பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸ் முதல் 40 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட் வெப்பநிலை 29 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், அதனையொட்டிய மத்திய வங்கக் கடல் பகுதியில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அப்பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து கோடை வெப்பத்தை தணித்துள்ளது.

திருநெல்வேலியில் கடந்த சில நாட்களாக கடுமையான வெயில் மக்களை வாட்டி வதைத்த நிலையில், நேற்றிரவு பலத்த காற்றுடன் பெய்த கனமழையால் மாநகரில் இதமான சூழல் நிலவியது.

தேனி, சிவகங்கை மாவட்டங்களில் சில இடங்களிலும் பலத்த மழை பெய்துள்ளது.

அதேநேரத்தில் வேலூர், திருப்பத்தூர், மதுரை உள்ளிட்ட **12** இடங்களில் அதிக வெப்பம் பதிவாகியுள்ளது.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

மத்திய கிழக்குப் பகுதியில் நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு அங்கிருந்து அமெரிக்கப் படைகள் தற்போதைக்கு திரும்பப் பெறப்பட மாட்டாது என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

------------

ஈரானின் ஆயுதக் கிடங்கில் நேற்று ஏற்பட்ட வெடிவிபத்தில் அந்நாட்டின் புரட்சிகர காவல் படையைச் சேர்ந்த **14** வீரர்கள் உயிரிழந்தனர்.

------------

கேரளாவில் கடந்த **2** வாரங்களில் பாம்பு கடிக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை **10**ஆக அதிகரித்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

------------

தெலங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தில் நேற்று காரும் - லாரியும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

------------

ஒகேனக்கல் அருவியில் தண்ணீர் வரத்து சீராக உள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

------------

தேனி மாவட்ட காவல்துறையில் 8 ஆண்டுகளாக பணிபுரிந்த மோப்ப நாய் பைரவ் உடல்நலக் குறைவால் உயிரிழந்ததையடுத்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையுடன் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

------------

திருச்சி - காரைக்கால் இடையே இயக்கப்படும் பயணிகள் ரயில், பாதை பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று திருவாரூர் வரை மட்டுமே இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் சித்திரை வசந்த திருவிழாவின் பத்தாம் நாளான நேற்று சுவாமி ஜெயந்திநாதர் வள்ளி தெய்வானையுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

சீனாவில் நடைபெறும் இந்தப் போட்டி மாலை 5 மணிக்கு தொடங்கவுள்ளது.

---------------

டென்மார்க்கில் நடைபெற்று வரும் தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

----------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஜம்ஷெட்பூர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - காசி அணியையும், மாலை மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தில்லி அணி - பஞ்சாப் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**